பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 09 வியாழக்கிழமை 25.11.2021 கதிர் 248

# யானை தாக்கி மீனவர் மரணம்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம், மன்னகண்டல் பகுதியில் யானை தாக்கியதில் மீனவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கெருடமடுவைச் சேர்ந்த அழகன் கோபால்ராஜ (வயது 64) என்பவரே 2

# கைதான ஈழ அகதிகள் 60 பேரின் விவரங்களை இந்திய அரசுக்கு அனுப்பிவைத்தது மாலைதீவு

## அனைவரையும் பொறுப்பேற்குமாறும் வேண்டுகோள்

(ந.லோகதயாளன்)

தமிழ்நாட்டின் அகதி முகாமில் தங்கியிருந்த வேளை கனடாவுக்குத் தப்பிச் சென்றபோது மாலைதீவில் அகப்பட்ட ஈழ அகதிகள் 60 பேரினது பெயர், விவரங்களையும் மாலைதீவு அரசு, இந்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஈழத்தில் இருந்து உயிர் தப்பி தமிழ்நாட்டுக்குச் சென்றவர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி தமிழ்நாடு முகாம்களில் இருந்து தப்பிச் சென்று நீண்டநாள் மீன்பிடி விசைப்படகு மூலம் கனடாவுக்குப் பயணித்தபோது இயந்திரக் கோளாறு காரணமாக மாலைதீவை அண்டியுள்ள அமெரிக்கப் படைக் கட்டுப்பாட்டுத் தீவில் அகப்பட் 2

# ஒற்றுமையில்லையேல் கிழக்கு பறிபோய்விடும்

## கனடாவில் முஸ்லிம்கள் மத்தியில் சாணக்கியன் எம்.பி. எச்சரிக்கை



கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் இஸ்லாமியர்களும் ஒற்றுமையாகச் செயற்படாவிடின், எதிர்காலத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் மாகாணத்தில் அதிகரித்துவிடும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார். 2



# ஐ.நா. உயர்மட்டக் குழு ஹக்கீமுடன் சந்திப்பு

ஐ.நா. சபையிலிருந்து வருகை தந்துள்ள அதன் மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்குரிய அரசியல் மற்றும் சமாதான விவகாரங்களுக்கான பிரதிச்செயலாளர் நாயகம் காலித் ஹையரி மற்றும் இலங்கைக்கான 2

# இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 30 அடிக்கு மேல்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரும் குளமான இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 30 அடியைத் தாண்டியது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பெரிய குளங் 2

# படகுப் பாதை விபத்து; கிண்ணியா நகர சபை தலைவர் இன்று கைது

கிண்ணியாவில் படகுப் பாதை விபத்தில் 6 பேர் உயிரிழந்தமையுடன் 20 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கிண்ணியா நகர சபைத் தலைவர் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை 2

# யாழில் கார்த்திகைப் பூ சூடிய விடயம்; இந்தியத் துணைத் தூதரகம் விளக்கம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., நல்லூரிலுள்ள சங்கிலியன் பூங்காவில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற பசுமைக் கண்காட்சி தொடர்பில் 2

## அரசபடைகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும்

# யாழ். பல்கலையில் மாவீரர்களை நினைவேந்திய மாணவர் சமூகம்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர்களுக்கு இன்று மலரஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் வருடாவருடம் மாவீரர் வாரத்தை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்களால் மலரஞ்சலி செலுத்துவது வழக்கமாக முன்னெடுக்கும் ஒரு செயற்பாடாக இருந்தது.

இந்நிலையிலேயே தற்போது மாவீரர் வாரம் என்பதால் மாணவர்கள் முழுந்தாளில் இருந்து வீரமறவர்களுக்குத் தமது ஆத்மார்த்தமான 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யானை தாக்கி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டில் இருந்து இரவு தொழிலுக்குச் சென்றவர் திரும்பவில்லை என்பதால் இன்று அதிகாலை உறவுகள் தேடிச் சென்றுள்ளனர். இதன்போதே யானை தாக்கி உயிரிழந்த நிலையில் முதியவர் கண்டுபிடிக்கப்பட்டார்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஒற்றுமையில்லையேல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கனடா வாழ் இலங்கை முஸ்லிம் சமூகத்தினரை நேற்று சந்தித்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மையிலேயே என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அனைத்து சமூகங்களுக்காகவும் குரல் கொடுக்கும் ஒருவராகவே என்னைப் பார்க்கின்றேன்.

சில இஸ்லாமிய அரசியல்வாதிகள் மத்தியில் கருத்து ஒன்று உள்ளது. இவர் என்ன எங்களுடைய பிரச்சினைகளைக் கதைக்கின்றார், எங்களுக்காகப் பேசுகின்றார் என்று அவர்கள் நினைக்கின்றனர். எனினும், நான் அனைத்துப் பிரச்சினைகளுக்காகவும் குரல் கொடுக்கின்றேன்.

அதிலே இஸ்லாமிய சகோதரர்கள் மத்தியிலேயே அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும்போது எங்களைப் பாராட்டுவதை விடவும், இஸ்லாமியர்களுடைய பாராட்டுக்கள் அதிகமாக வருகின்றன.

எனக்கு முன்னர் உரையாற்றிய ஒருவர் சொன்னார், நாங்கள் அவர்களுக்கு வாக்களிக்கப்போவதில்லை என்று. அது உண்மைதான். என்னைப் பொறுத்தவரையில் நான் அந்த வாக்குகளை எதிர்பார்த்து எதனையும் செய்யவில்லை - என்றார்.

## உயர் மட்டக் குழு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐ.நா. வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் உள்ளிட்ட உயர்மட்ட தூதுக் குழுவினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பு - ஷங்கரிலா ஹோட்டலில் இன்று நடைபெற்றது.

இதன்போது சிறுபான்மைச் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சமகால அரசியல் சூழ்நிலை என்பன குறித்துக் கலந்துரையாடப்பட்டன.

## இரணைமடுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களில் வான் பாய்வதோடு ஏனையவை நிறைந்து வருகின்றன. இதில் மிகப் பெரிய குளமான இரணைமடுக் குளமானது 36 அடி கொள்ளளவு உள்ளபோதும் இன்று மாலை 30 அடி 01 அங்குலமாக உயர்ந்துள்ளது.

கனகாம்பிகை குளமானது 10.06 அடி கொள்ளளவாக உள்ளபோது தற்போது 10 அடி 11 அங்குலமாக உயந்து 5 அங்குலம் வான் பாய்கின்றது.

பிரமந்தனாறு குளத்தின் நீர்மட்டம் மிக வேகமாக அதிகரித்து 12 அடி கொள்ளளவாக உள்ளபோதும் தற்போது 12 அடி 6 அங்குலமாக உயர்ந்து 6 அங்குலம் வான் பாய்கின்றது.

இவ்வாறே கல்மடு குளத்தின் நீர்மட்டமும் தற்போது வேகமாக அதிகரித்து 26 அடி கொள்ளளவு உள்ள குளம் தற்போது 26 அடியைத் தொட்டுவிட்டது.

இதனால் மழை தொடர்ந்து பொழியுமாக இருந்தால் தொடர்ந்து வான் பாயும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கிண்ணியா நகர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவதற்காக அவர் அழைத்துச் செல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய படகு உரிமையாளர் உள்ளிட்ட மூவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நகர சபைத் தலைவர் இன்று கைதுசெய்யப்பட்டார்.

அவரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கிண்ணியா - குறிஞ்சாக்கேணி பாலத்தை ஒன்பது மாதங்களுக்குள் நிர்மாணிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர். டபிள்யூ.டபிள்யூ. ஆர். பிரேமசிறி இதனைத் தெரிவித்துள்ளார்.

## யாழில் கார்த்திகைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதரகம் தெளிவுபடுத்தல் ஒன்றை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள சங்கிலியன் பூங்காவில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் கார்த்திகைப் பூ சூடிய விடயம் தொடர்பில் இணையத்தளங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிகழ்வு என திரிவுபடுத்தப்பட்டு செய்திகள் வெளியான நிலையிலேயே இந்தியத் தூதரகத்தால் அதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், மரக்கன்றுகள் விநியோக நிகழ்வு தொடர்பான பல தவறான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தமை கவனத்திற்கு வந்தன. யாழ். இந்தியத் துணைத் தூதுவர், அழைப்பின் பேரில் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். அத்தகைய பங்கேற்பு அமைப்பாளர்கள் அல்லது அவர்களின் செயல்களுடன் உத்தியோக பூர்வ நிகழ்ச்சிக்கு வெளியே, எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை. இது தொடர்பில் அவருக்கு எந்த முன் அறிவித்தலும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர்.

பல்கலைக்கழகச் சூழலில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் மாணவர்களை அச்சுறுத்துகின்ற வகையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் மாணவர்கள் ஆத்மார்த்தமான முறையில் தமது அஞ்சலிகளைச் செலுத்தியுள்ளனர்.





## கைதான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டதை 'காலைக்கதிர்' முதலில் செய்தி பிரசுரித்திருந்தது.

அவ்வாறு அகப்பட்டவர்களை அமெரிக்கப் படைகள் மாலைதீவு அரசிடம் கையளித்த நிலையில் அனைவரும் இந்தியாவில் இருந்து புறப்பட்டதால் இந்திய அரசுக்கு மாலைதீவு அரசு 60 பேரையும் பொறுப்பேற்குமாறு கோரி பெயர், விவரங்களை அனுப்பி வைத்துள்ளது.

அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட பெயர், விவரங்கள் ஆங்கிலத்தில் கீழே இணைக்கப்பட்டுள்ளன.

| S.NO | DISTRICT | NAME | AGE | CAMP NAME |
|---|---|---|---|---|
| 1 | TRICHY | AHILAN ARAVINTH | 29 | RAYANUR |
| 2 | TRICHY | ELANGESHWARAN | 40 | RAYANUR |
| 3 | TRICHY | MEHALA | 35 | RAYANUR |
| 4 | TRICHY | THARUN | 8 | RAYANUR |
| 5 | TRICHY | VARNIKA | 6 | RAYANUR |
| 6 | TRICHY | KLINDAN | 24 | RAYANUR |
| 7 | TRICHY | GNANARASANTH | 35 | RAYANUR |
| 8 | TRICHY | SANJAI | 22 | RAYANUR |
| 9 | TRICHY | SULAXSAN | 38 | MANDAPAM |
| 10 | TRICHY | SAGAYARANI | 35 | MANDAPAM |
| 11 | TRICHY | HETLIN | 8 | MANDAPAM |
| 12 | TRICHY | JACKLIN | 6 | MANDAPAM |
| 13 | TRICHY | KAMINI THILAK | 40 | THIRUVATHAVUR |
| 14 | TRICHY | UMA | 30 | THIRUVATHAVUR |
| 15 | TRICHY | DILSANA | 9 | THIRUVATHAVUR |
| 16 | TRICHY | SATHUSAN | 6 | THIRUVATHAVUR |
| 17 | TRICHY | THIRUSELVAM | 38 | THIRUVATHAVUR |
| 18 | TRICHY | ROKINI | 35 | THIRUVATHAVUR |
| 19 | TRICHY | THANISHKA | 10 | THIRUVATHAVUR |
| 20 | TRICHY | HARISHKA | 8 | THIRUVATHAVUR |
| 21 | TRICHY | BASKAR | 32 | THIRUVATHAVUR |
| 22 | TRICHY | BEAULA | 30 | THIRUVATHAVUR |
| 23 | TRICHY | SRUTHIKA | 10 | THIRUVATHAVUR |
| 24 | TRICHY | SWATHIKA | 9 | THIRUVATHAVUR |
| 25 | TRICHY | KIRUTHIKA | 8 | THIRUVATHAVUR |
| 26 | TRICHY | SAGAYANATHAN (a) RONI | 40 | THIRUVATHAVUR |
| 27 | TRICHY | ARASAMMAL | 33 | THIRUVATHAVUR |
| 28 | TRICHY | HANSIKA | 11 | THIRUVATHAVUR |
| 29 | TRICHY | JESMICKAN | 8 | THIRUVATHAVUR |
| 30 | TRICHY | ANDRIO | 4 | THIRUVATHAVUR |
| 31 | TRICHY | DHUBI | 2 | THIRUVATHAVUR |
| 32 | TRICHY | QUEENCY | 5 | VALAVANTHAKOTTAI |
| 33 | TRICHY | RANI | 38 | VALAVANTHAKOTTAI |
| 34 | TRICHY | P.KISHANTH | 29 | VALAVANTHAKOTTAI |
| 35 | TRICHY | SANTHRAN | 18 | VALAVANTHAKOTTAI |
| 36 | TRICHY | ANISHMAN | 23 | THIRUVATHAVUR |
| 37 | TRICHY | SANTHURU | 18 | THIRUVATHAVUR |
| 38 | TRICHY | SIVAKUMAR | 38 | THIRUVATHAVUR |
| 39 | TRICHY | VASANTHAN | 23 | THIRUVATHAVUR |
| 40 | TRICHY | JOHNSAN | 38 | THIRUVATHAVUR |
| 41 | NELLAI | R.VASANTHAN | 40 | GOBALASAMUTHIRAM |
| 42 | NELLAI | G.MANIKANDAN | 24 | GOBALASAMUTHIRAM |
| 43 | NELLAI | S.THASAN(a)SANTHAN | | GOBALASAMUTHIRAM |
| 44 | ERODE | S.SIVAKUMAR | | BHAVANISAGAR |
| 45 | ERODE | GOMALA LOJINI | | BHAVANISAGAR |
| 46 | ERODE | SHAMINI | | BHAVANISAGAR |
| 47 | ERODE | MAYURIYA | | BHAVANISAGAR |
| 48 | ERODE | SABINRAJ | | BHAVANISAGAR |
| 49 | ERODE | PRAJITH | | BHAVANISAGAR |
| 50 | ERODE | SURESH | | BHAVANISAGAR |
| 51 | ERODE | SINDHU | | BHAVANISAGAR |
| 52 | ERODE | CHILDREND | | BHAVANISAGAR |
| 53 | ERODE | CHILDREND | | BHAVANISAGAR |
| 54 | ERODE | MARATHADIKUMAR | | BHAVANISAGAR |
| 55 | ERODE | GOWSICK | | BHAVANISAGAR |
| 56 | TRICHY | ALPONSE | | VALAVANTHAKOTTAI |
| 57 | ERODE | SURESH | | BHAVANISAGAR |
| 58 | ERODE | INTHUMATHI | | BHAVANISAGAR |
| 59 | ERODE | MERY LAKSANA | | BHAVANISAGAR |
| 60 | ERODE | DILACKSAN | | BHAVANISAGAR |


பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
**16 Days of Activism against Gender Based Violence**
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பால்நிலை வன்முறைகளை இல்லாதொழிக்க தனி மனிதன் மற்றும் சமூகப் பங்களிப்பும், பொறுப்புணர்வும் இன்றியமையாதது. பொறுப்புணர்ந்து செயற்படுவோம்!."

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## குத்துக்கரண அரசியலுக்கு முடிவு?

**இலங்கையின் முஸ்லிம்களின் அரசியலில் ஓர் ஒழுங்கு முறைக்கான ஒளிக்கீற்று தென்படுவதாகத் தோன்றுகின்றது.**

**ஆரம்பத்தில் தமிழ்ப் பேசும் மக்களாகத் தமிழர்களோடு அரசியல் செய்த முஸ்லிம் மக்களை, அவர்கள் மத்தியில் தோன்றிய அரசியல் தலைவர்கள், மத மற்றும் பண்பியல் காரணமாகத் தனித்தொரு மக்கள் கூட்டமாக அடையாளம் கண்டு, தனித்துவ இனமாக அவர்களை வழிநடத்த முற்பட்டனர். அதனால் முஸ்லிம்கள் தனித்துவமான இனம் என்ற அடிப்படையில் அரசியல் செய்யும் சூழல் ஏற்பட்டது.**

**அந்த மக்கள் குழுமத்தின் நலன்கள், பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகியவை தொடர்பில் அந்தத் தனித்துவம் அவர்களுக்கு அவசியமானதே.**

**ஆனால் அப்படி முஸ்லிம்களைத் தனித்த மக்கள் கூட்டமாக அடையாளம் காண்பித்து, அதனை வெளிப்படுத்திய, அரசியல் தலைவர்களில் பலர், அந்தத் தனித்துவ வலிமையை தங்களின் தனிப்பட்ட அரசியல் மற்றும் பிற வசதி, வாய்ப்புக்கள், உழைப்புக்களுக்குப் பயன்படுத்துகின்றமையை வழக்கப்படுத்திக் கொண்டமைதான் விசனத்துக்குரியது.**

**முஸ்லிம்கள் என்றாலே ஒரு வர்த்தக சமூகம் என்ற எண்ணப்பாங்கு பொதுவாக உள்ளது. அதனடிப்படையில் அவர்களின் அரசியலும் வர்த்தகத்துக்குரியது – லாப, நட்டக் கணக்குப் பார்க்கப்பட வேண்டியது – என்ற ஒரு கருத்து நிலைப்பாட்டை முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் வெற்றிகரமாக வெளிப்படுத்தி, நடைமுறையில் காட்டி வருகின்றார்கள்.**

**முஸ்லிம் மக்களின் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் – குறிப்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் அதன் தலைவர் ரிஷாத் பதியுதீனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர் ஹக்கீமும் – முஸ்லிம்களின் அரசியலைத் தனித்துவமாக முன்னெடுக்க முயன்றாலும், அக்கட்சிகளின் சார்பில் ஏதோ ஒரு வழிமுறையைப் பயன்படுத்தி மக்கள் பிரதிநிதிகளாகி விடுபவர்கள் அந்த வழிமுறைக்கு இணங்குபவர்களாக இல்லை.**

**மாறாக, அதிகாரத்தில் இருப்பவர்களுடன் ஒட்டி தம் வழிகளைப் பெருக்குவதற்காக 'ஆயாராம் காயாராம்' அரசியலே செய்துவருகின்றனர்.**

**தேர்தல் சமயத்தில் யாருக்கு எதிராகக் கடும் பிரச்சாரங்களைச் செய்து, அதன் மூலம் முஸ்லிம் மக்களின் வாக்குகளைச் சுருட்டி எம்.பியாகின்றார்களோ, அதே தரப்புகளுக்கு, எம்.பியான பின்னர் கொடி, குடை, ஆலவட்டம் பிடிக்கும் ஏவலர்களாகி விடுகின்றனர் இந்த முஸ்லிம் பிரகிருதிகள்.**

**தத்தமது கட்சிகளின் முடிவுகளை மீறி, இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தின் போதும், இப்போதைய வரவு – செலவுத் திட்டத்திலும் அவர்கள் நடந்து கொண்ட முறைமை அதுதான்.**

**இப்போது மட்டுமல்ல, கடந்த இரண்டரை தசாப்த கால முஸ்லிம் அரசியலை எடுத்துப் பார்த்தீர்களானால் அங்கு 'பல்டி'கள்தான் முன்னணியில் துலங்கும்.**

**இந்தப் போக்குக்கு எதிராக இம்முறை முஸ்லிம் கட்சிகளின் தலைமை ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முற்பட்டிருக்கின்றமை முக்கிய அம்சம்.**

**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய மூன்று எம்.பிக்களினதும் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்தி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூன்று எம்.பிக்களினதும் கட்சிப் பதவிகளை இடைநிறுத்தி, அவர்களின் நடவடிக்கைக்கு விளக்கம் கோரியுள்ளது.**

**எது, எப்படியோ இத்தகைய ஒழுங்கு நடவடிக்கைகள் மூலம் முஸ்லிம்கள் மத்தியிலான குத்துக்கரண அரசியலுக்கு ஒரு முடிவு கட்டப்பட்டால் நல்லது. இல்லையேல் தொப்பியின் பெயரால் அவர்களின் அரசியலை விமர்சிக்கும் பண்பு தொடரவே செய்யும்.**

# கிளிநொச்சி டிப்போ சந்தியில் சுற்றுவட்டப் பாதை அமைக்கப் பிரதமர் ஜோன்ஸ்டனுக்கு உத்தரவு

## சிறிதரன் எம்.பியின் கோரிக்கைக்கு உடனடித் தீர்வு



கிளிநொச்சி டிப்போ சந்தியில் சுற்று வட்டப் பாதை அமைக்க வேண்டும் என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (புதன்கிழமை) உரையாற்றிய சிறிதரன் எம்.பி., டிப்போ சந்தியில் சுற்றுவட்ட சந்தியை அமைத்து சைகை விளக்குகளை பொருத்துமாறு தான் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவருக்கு கடிதம் எழுதியும் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிலையில், தயவு செய்து அதனை நிறைவேற்றுங்கள் என அவர் இதன்போது சபையில் இருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது பேசிய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கிளிநொச்சி பிரதேசத்தின் போக்குவரத்து பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எனக்கு இப்போது பணிப்புரை விடுத்துள்ளார், உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

அதேவேளை வடக்கில் விபத்துக்கள் இடம்பெறுவதாகக் கூறப்படும் நிலையில், இராணுவ வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படுவதாக மாத்திரம் தகவல்களை வெளியி[...] வேண்டாம். தென்பகுதியிலும் இராணு[...] பொலிஸ் வாகனங்கள் மோதி உயிரிழப்புக்க[...] ஏற்பட்டுள்ளன.

எனவே சர்வதேசத்துக்காக தவறா[...] தகவல்களை வழங்க வேண்டாம் . இலங்கை[...]யில் நாள் ஒன்றுக்கு விபத்தால் 8 பேர் மரண[...]மடைகின்றனர். வருடமொன்றுக்கு 2[...] ஆயிரம் விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

இவற்றில் 7 ஆயிரம் விபத்துக்கள் பா[...] தூரமானவையாகவுள்ளன. இவ்வாறா[...] விபத்துக்களைக் கட்டுப்படுத்த ஜனாதிபதியி[...] பணிப்புரையில் விசேட வேலைத்திட்ட[...] முன்னெடுக்கப்படுகின்றது. இது நான்[...] வருடங்களுக்குள் நடைமுறைப்படுத்த[...]படும். – என்றார்.

இது தொடர்பில் சிறிதரன் எம்.பி. கூறுகை[...]யில் –

உடனடியாகவே நடவடிக்கை எடுத்த பிரத[...]ருக்கும் போக்குவரத்து அமைச்சருக்கு[...] நெடுஞ்சாலைகள் அமைச்சருக்கும் நன்[...] தெரிவிக்கின்றேன்.– என்றார்.

# இலங்கையின் விமானப் போக்குவரத்துசேவை எதிர்வரும் வாரங்களில் மேலும் அதிகரிக்கும்

இலங்கையின் விமானப் போக்குவரத்து எதிர்வரும் வாரங்களில் மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு புதிய விமான நிறுவனங்கள் டிசெம்பரில் இருந்து நாட்டுக்கு நேரடி விமான சேவையை தொடங்கவுள்ள நிலையில், இந்த அதிகரிப்பு ஏற்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, டிசெம்பர் 3 ஆம் திகதி, ரஷ்யா மற்றும் கஜகஸ்தானில் இருந்தும் வாரத்துக்கு இரு முறை இலங்கைக்கு விமான சேவையை முன்னெடுக்கவுள்ளன.

அதேவேளை போலந்தில் இருந்து டிசெம்பர் 8 முதல் விமானங்கள் இயக்கப்படவுள்ளன.

மேலும் இத்தாலியில் இருந்து டிசெம்பர் 15ஆம் திகதி முதல் கொழும்புக்கான விமான சேவை ஆரம்பமாகவுள்ளது.

இதேநேரம், கொரோனாத் தொற்றுக்கு முன்னர் இலங்கைக்கு விமானங்களை இயக்கிய 37 விமான நிறுவனங்களில் 17 பயணிகள் விமானங்கள் தங்கள் சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளன எனவும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

சரக்கு விமானங்களில் எட்டு விமான நிறுவனங்கள் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொற்று நோய்க்கு முன்னர் விமான சேவையை முன்னெடுத்த அனைத்து விமான நிறுவனங்களுடனும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# கிண்ணியாவில் உயிரிழந்தோருக்கு முல்லைத்தீவில் அஞ்சலி நிகழ்வு!





கிண்ணியா படகு விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு முல்லைத்தீவு கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை மாணவர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் நேற்றுமுன்தினம் நான்கு மாணவர்கள் உள்ளிட்ட ஆறு பேர் உயிரிழந்திருந்தனர்.

படகு விபத்தில் உயிரிழந்த மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தும்முகமாக முல்லைத்தீவு கூழாமுறிப்[...] அ.த.க. பாடசாலை மாணவர்கள் சுடரேற்றி மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.

குறித்த அஞ்சலி நிகழ்வில் ஆசியர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினரும் கலந்து கொண்டனர்

# இஸ்லாமிய அடையாளத்தை குலைக்கிறது இம்ரான் அரசு குற்றம் சாட்டினார் ஜனநாயக இயக்கத்தின் தலைவர்



இம்ரான் கான் தலைமையிலான அரசாங்கம் நாட்டின் இஸ்லாமிய அடையாளத்தை சேதப்படுத்துகிறது என பாகிஸ்தானின் எதிர்க்கட்சிகளின் கூட்டணியான பாகிஸ்தான் ஜனநாயக இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது. அத்துடன், இம்ரான் அரசாங்கம் கடலில் மூழ்கும் வரை தொடர்ந்து போராடப்போவதாகவும் பாகிஸ்தான் ஜனநாயக இயக்கம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் பொவரில் நடந்த இம்ரான் அரசாங்கத்திற்கான எதிர்ப்பு பேரணியில் உரையாற்றிய பாகிஸ்தான் ஜனநாயக இயக்கத்தின் தலைவர் மௌலானா பஸ்லூர் ரஹ்மான், பேரணி இஸ்லாமாபாத்தை அடையும் போது பிரதமர் கான் தப்பிக்க வாய்ப்பில்லை. நாங்கள் வீதிகளை முற்றுகையிட்டு அரசாங்கத்தினை முடக்குவோம் என்று குறிப்பிட்டுள்ளார் என 'ஜியோ நியூஸ்' தெரிவித்துள்ளது. இம்ரானின் அரசாங்கம் கடலில் மூழ்கும் வரை நாங்கள் போராடுவோம் தற்போதைய அரசாங்கத்தின் அமைப்பு நாட்டின் இஸ்லாமிய அடையாளத்தை சிதைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


பாகிஸ்தான் ஜனநாயக இயக்கத்தில் எதிர்க்கட்சிகளின் பல கூட்டணிகள் உள்ளன. அவை இம்ரான் கான் தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக இறுதி வரையில் போராடுவதென முடிவெடுத்துள்ளன.

எதிர்க்கட்சிக் கூட்டணியானது பாகிஸ்தானில் உள்ளாட்சித் தேர்தலை நடத்துமாறு கோரவில்லை, மாறாக உடனடியாகப் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்றே வலியுறுத்துகின்றன. அதனடிப்படையில் 2023 இல் தான் தேர்தலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தான் ஜனநாயக இயக்கத்தின் தலைவர், பொதுத்தேர்தலைப் பற்றிக் குறிப்பிடுகையில், 2018 இல் மக்களிடத்திலிருந்து திருடப்பட்ட வாக்குகளை அவர்களுக்குத் திரும்பக் கொடுக்க வேண்டும். அரசாங்கம் அடுத்த தேர்தலில் மீண்டும் ஒருமுறை மோசடி செய்ய ஏற்பாடுகளை செய்துள்ளது என்று குற்றம் சாட்டினார்.

பாகிஸ்தானின் தற்போதைய இம்ரான் அரசாங்கத்தின் 'மக்கள் விரோத' நடவடிக்கைகள் மற்றும் பணவீக்கத்திற்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்களை நடத்துவதுடன், இஸ்லாமாபாத்தை நோக்கி நீண்ட அணிவகுப்பு நடத்தும் முடிவு இம்மாத ஆரம்பத்தில் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் மத்திய வங்கிக்கு எதிராக வர்த்தக முதலீட்டு நிறுவனம் வழக்கு




ஐக்கிய அரபு எமிரேட்ஸை தளமாகக் கொண்ட வர்த்தக மற்றும் முதலீட்டு நிறுவனமான எனர்ஜி குளோபல் இன்டர்நேஷனல் பாகிஸ்தானின் மத்திய வங்கி மற்றும் தனியார் வங்கியொன்றுக்கு எதிராக சுமார் 74பில்லியன் ரூபா நட்டஈடு வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

'தி எக்ஸ்பிரஸ் ட்ரிப்யூன்' ஊடகத்தின் கூற்றுப்படி, எனர்ஜி குளோபல் இன்டர்நேஷனல் நிறுவனமானது டிசம்பர் 2012 இல் வங்கிக் கணக்குகளை முடக்கிய மற்றும் சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயக் கணக்கை சட்டவிரோதமான முறையில் மாற்றிய நடவடிக்கையின் காரணமாக மத்திய வங்கிக்கு எதிராக நஷ்டஈடு வழக்கைத் தாக்கல் செய்துள்ளது

சிந்து மாகாண உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மத்தியவங்கியுடன் தனியார் வணிக வங்கியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையை குறித்த இருவங்கிகளின் பிரதிநிதிகளையும் அடுத்த ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனர்ஜி குளோபல் இன்டர்நேஷனல் நிறுவனமானது அமெரிக்காவை மையமாகக் கொண்டது என்பதன் அடிப்படையில் டிசெம்பர் 2012 இல், குறித்த மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு மத்திய வங்கி அந்நிறுவனத்தின் கணக்குகளை மத்திய வங்கி முடக்கியிருந்தது.

மத்தியவங்கியின் மேற்படியான நடவடிக்கைகள் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு முரணானது என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த நிறுவனத்தின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு முன்பு முன்னறிவித்தல் ஒருபோதும் விட்டிருக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், எனர்ஜி குளோபல் நிறுவனம் தனது வங்கிக் கணக்குள் முடக்கப்பட்ட நிலையில் நிதிப்பரிமாற்ற நடவடிக்கைகளை மத்திய வங்கி ரூபாவில் மேற்கொண்டமை சட்டவிரோதமானது என்று அறிவிக்குமாறு நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதுமட்டுமன்றி எனர்ஜி குளோபல் நிறுவனம் கடந்த ஆண்டு டிசெம்பரில் பாகிஸ்தான் மத்திய வங்கி ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தில் தமது வங்கிக் கணக்குகளை முடக்கி வைத்துள்ளஷ்மாயால் நிலுவையாக இருக்கும் தொகைகளை விடுவிக்குமாறும் குறித்த நிறுவனம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸின் கலே கடற்பகுதியில் படகு கவிழ்ந்து 27 அகதிகள் சாவு

## இங்கிலாந்து செல்ல முயலும் குடியேறிகளது அவலம் நீடிப்பு



பிரான்ஸின் வடக்கே ஆங்கிலக் கால்வாயில் கலே நீரிணைப் பகுதியில்(Pas de Calais) நேற்று மாலை குடியேறிகளது படகு ஒன்று கவிழ்ந்ததில் குறைந்தது 27 பேர் உயிரிழந்திருக்கின்றனர். மீனவர்கள் கொடுத்த அவசர தகவலை அடுத்து பிரான்ஸின் கடற்படையினரும் அவசர மீட்புக் குழுவினரும் கடலில் தத்தளித்த பலரைக் காப்பாற்ற முயன்றுள்ளனர். எனினும் அவர்களில் அநேகர் சடலங்களாவே மீட்கப்பட்டிருக்கின்றனர். உயிர் தப்பியவர்களைத் தேடும் பணிகள் ஹெலிக்கொப்ரர்களது உதவி யுடன் இன்று அதிகாலை வரை நீடித்தன. குடியேறிகள் சுமார் 30 பேருடன் இங்கிலாந்து நோக்கிப் பயணித்த காற்று நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் படகே கவிழ்ந்துள்ளது பலவீனமான அந்தப் படகில் ஆள்களை ஏற்றிக் கடத்திவந்த வர்கள் என நம்பப்படுகின்ற நால்வர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டாமனா (Grald Darmanin) சம்பவம் நடந்த கடற்கரைப் பகுதிக்கு உடனடியாக விஜயம் செய்தார். அமைச்சு வெளியிட்ட தகவல்களின் படி உயிரிழந்தவர்களில் ஐந்து பெண்களும் ஒரு குழந்தையும் அடங்குவர். அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவரவில்லை.

சம்பவம் குறித்து அதிர்ச்சி வெளியிட்டிருக்கும் அதிபர் மக்ரோன், ஆங்கிலக் கால்வாய் ஓர் இடுகாடாக மாறுவதை பிரான்ஸ் அனுமதிக்காது (France willnot let the Channel become a cemetery) என்று தெரிவித்திருக்கிறார். பிரிட்டிஷ் பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் உயிரிழப்புகள் குறித்துத் தனது அதிர்ச்சியை வெளியிட்டிருக்கிறார்.

பிரான்ஸ் - இங்கிலாந்து இடையே ஆங்கிலக் கால்வாயில் நீடித்து வருகின்ற படகு அகதிகளது அவலங்களில் நேர்ந்த மிக அதிகமான உயிரிழப்புகள் இதுவே ஆகும். ஆபிரிக்கா, மத்திய கிழக்கு போன்ற பகுதிகளில் இருந்து இங்கிலாந்தில் புகலிடம் கோர வருபவர்கள் மிக நீண்ட காலமாக ஆங்கிலக் கால்வாய் ஊடாக ஆபத்தான படகுப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். அலை மற்றும் கொந்தளிப்பு நிறைந்த ஆபத்தான கால்வாயில் அடிக்கடி நடக் கின்ற இதுபோன்ற அகதிகள் அவலங்களுக்கு இரு நாடுகளும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தி வருகின்றன.

# பாகிஸ்தானில் அதிகரிக்கும் சோதனைச்சாவடிகளுக்கு எதிராக போராட்டம்!

பாகிஸ்தானில் பலுசிஸ்தானின் மாகாணத்தில் உள்ள குவாடார் மாவட்டத்தில் தேவையற்ற சோதனைச் சாவடிகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் அம்மாவட்டத்தில் உள்ள மீன்பிடி இழுவைப் படகுகளுக்கு எதிராகவும் குறித்த போராட்டக்காரர்கள் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர். எக்ஸ்பிரஸ் ட்ரிப்யூன் ஊடகமானது, குறித்த போராட்டம் தொடர்ச்சியாக மூன்றாவது நாளாகவும் இடம்பெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளது. குறித்த போராட்டத்தினை ஜாத் இ இஸ்லாமி பலுசிஸ்தானின் மாகாணப் பொதுச்செயலாளர் மௌலானா ஹிதாயத் உர் ரஹ்மான் குறித்த மாவட்ட மக்களின் ஒத்துழைப்புடன் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளார்.

அம்மாவட்டத்தில் உள்ள உள்ளூர் மீனவர்களுக்கு தொடர்ச்சியாக பெரும் நட்டங்கள் ஏற்படுவதற்கு தேவையற்ற சோதனைச் சாவடிகள் மற்றும் ஆழ்கடல் மீன்பிடி விசைப்படகுகள் காரணமாக அமைவதால் அவற்றை அகற்றுமாறு வலுவான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னதாக, பலுசிஸ்தான் மாகாண முதலமைச்சர் ஜம் கமால் கான் அய்லானி அனுப்பிய தூதுக்குழு, போராட்டக்காரர்களுடன் பேச்சுக்களை நடத்தியது எனினும் அப்பேச்சு தோல்வியில் நிறைவடைந்தமையால் போராட்டக்காரர்கள் தொடர்ச்சி யாக போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேநேரம் தமது கோரிக்கைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் அரசு தீர்வு வழங்கும் வரை முற்றுகை போராட்டம் தொடரும் என்று போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

இதேநேரம், கடந்த ஓகஸ்ட் மாதம், பாகிஸ்தானின் குவாடாரில் நூற்றுக்கணக்கான மக்கள் சீனாவின் இழுவை படகுகள் மூலம் சட்டவிரோத மீன்பிடித்தலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

2015 ஆம் ஆண்டில், சீனா பாகிஸ்தானில் 46 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தட திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தில் பலுசிஸ்தான் மாகா ணமும் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும். அதாவது, பலுசிஸ்தானில் உள்ள பாகிஸ்தானின் தெற்கு குவாடர் துறைமுகத்தை அரேபிய கடலின் ஊடாக சீனாவின் மேற்கு ஜின்ஜியாங் பகுதியுடன் இணைப்பதே திட்டமாகும். அதன்மூலம் சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையேயான தொடர்பை மேம்படுத்த சாலை, ரயில் மற்றும் எண்ணெய்க் குழாய் இணைப்புகளை உருவாக்கும் திட்டங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# கொரோனா சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை இந்தியாவில் தொடர்ந்து சரிவடைந்து வருகிறது

கொரோனா புதிய பாதிப்பை விட அதன் பிடியில் இருந்து மீள்பவர்கள் எண்ணிக்கை நாள்தோறும் அதிகமாக உள்ளது. இதனால் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருகிறது.

இன்று காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 9,119 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

அதே நேரம் தொற்று பாதிப்பில் இருந்து நேற்று ஒரேநாளில் 10,264 பேர் நலம் பெற்று வீடு திரும்பினர்.

இதுவரை பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 3 கோடியே 45 லட்சத்து 44 ஆயிரத்து 882 ஆக உயர்ந்தது. தொற்று பாதிப்பில் இருந்து 3 கோடியே 39 லட்சத்து 67 ஆயிரத்து 962 பேர் மீண்டுள்ளனர்.

தற்போதைய நிலைவரப்படி, 1,09,940 பேர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது கடந்த 539 நாள்களில் இல்லாத அளவில் குறைவு ஆகும். கொரோனா பாதிப்பால் கேரளாவில் 308 பேர் உள்பட நாடு முழுவதும் நேற்று 396 பேர் இறந்துள்ளனர். இதனால் மொத்த பலி எண்ணிக்கை 4,66,980 ஆக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் நேற்று 90,27,638 டோஸ் தடுப்பூசிகள் மக்களுக்கு போடப்பட்டது. இதுவரை செலுத்தப்பட்ட தடுப்பூசி டோஸ்களின் எண்ணிக்கை 119 கோடியே 38 லட்சத்தைக் கடந்துள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தகவல்படி, நேற்று 11,50,538 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. மொத்த பரிசோதனை எண்ணிக்கை 63.59 கோடியாக உயர்ந்துள்ளது.



# தமிழகத்தில் உச்சத்தில் இருந்த தக்காளியின் விலை குறைந்தது

தமிழகம் உள்பட பல்வேறு மாநிலங்களில் பருவ மழை தொடங்கியது. இதன் எதிரொலியால், தமிழகத்திற்கு தக்காளியின் வரத்து குறைந்தது. இதனால், சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் தக்காளி விலை கிலோவுக்கு 180 இந்திய ரூபா வரை விற்கப்பட்டது.

அன்றாட சமையலுக்கு தேவைப்படும் தக்காளியின் விலை அதிரடியாக உயர்ந்ததால், பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். தக்காளியின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கும்படியும் அவர்கள் அரசுக்கு வலியுறுத்தினர். தொடர்ந்து, பசுமை பண்ணை கடைகளில் தக்காளி விலை கிலோவுக்கு ரூ.70, ரூ.80க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தன.

இந்நிலையில், சென்னை கோயம்பேடு சந்தையில் மொத்த விற்பனையில் ஒரு கிலோ நாட்டு தக்காளி விலை ரூ.30 குறைந்தது.

கோயம்பேட்டு சந்தையில் நேற்று முதல் ரக தக்காளி கிலோவுக்கு இந்திய ரூபா 110க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் இன்று ரூ.30 குறைந்து, கிலோவுக்கு ரூ.80க்கு விற்பனையாகிறது. இதே போல், 2 ஆம் ரக தக்காளி இந்திய ரூபா 100 இல் இருந்து ரூ.30 குறைந்து, ரூ.70க்கு விற்பனையாகிறது. ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து நேற்று 30 லொறிகளாக இருந்த தக்காளி வரத்து, இன்று 45 லொறிகளாக உயர்ந்துள்ளது. தக்காளியின் வரத்து மேலும் அதிகரிப்பது மூலம், அதன் விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளதாக கோயம்பேடு சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தக்காளி விலை சற்று குறைந்துள்ளதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மழை காரணமாக

# தமிழகத்தில் 4 மாவட்டங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை மீண்டும் தீவிரமடைந்துள்ளதால், பல்வேறு மாவட்டங்களில் வரும் 28 ஆம் திகதி வரை கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.


இதையடுத்து, தமிழகத்தில் சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இதன் எதிரொலியால், புதுக்கோட்டை, திருவாரூர், மயிலாடுதுறை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அளித்து அம் மாவட்ட ஆட்சியர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

## அண்ணா பிறந்த நாளை ஒட்டி

# நல்லெண்ண அடிப்படையில் 700 ஆயுள் கைதிகள் விடுதலை

## வெளியானது அரசாணை



தமிழக சிறைகளில் உள்ள ஆயுள் கைதிகள் நல்லெண்ண அடிப்படையில் அண்ணா பிறந்த நாளையொட்டி விடுதலை செய்யப்படுவார்கள் என தமிழக சட்டசபையில் கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் இதற்கான அறிவிப்பை முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்ததுடன் இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:

சிறைக் கைதிகளின் முன் விடுதலை தொடர்பான சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு பேரறிஞர் அண்ணாவின் 113 ஆவது பிறந்த நாளையொட்டி (வருகிற (2022 ஆம் ஆண்டு) செப்டெம்பர் 15 ஆம் திகதி) நீண்ட காலம் சிறை வாசம் அனுபவித்து வரும் ஆயுள் தண்டனை கைதிகள் விடுதலை செய்யப்பட உள்ளனர். கைதிகளின் தண்டனையை நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் வைத்து முன்னதாக விடுதலை செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

இதையடுத்து சென்னை புழல் சிறைச்சாலை உள்பட தமிழகம் முழுவதும் உள்ள சிறைகளில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் 700 பேரை விடுதலை செய்ய சிறைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

எந்தெந்த சிறைகளில் யார் யார் விடுதலை செய்யப்பட உள்ளனர் என்பது பற்றிய விவரங்களை சிறைத்துறை அதிகாரிகள் சேகரித்து வைத்துள்ளனர். ஆண்டுதோறும் அண்ணா பிறந்த நாளையொட்டி சிறைக் கைதிகள் நல்லெண்ணம் அடிப்படையில் விடுதலை செய்யப்படுவது வழக்கம். அந்த வகையில்தான் அண்ணா பிறந்த நாளான செப்டெம்பர் 15 ஆம் திகதியையொட்டி 700 சிறைக் கைதிகளை விடுவிக்க தமிழக அரசு முடிவு செய்து அதற்கான அரசாணையை வெளியிட்டுள்ளன குறிப்பிடத்தக்கது.

# ஐ.என்.எஸ். வேலா நீர்மூழ்கிக் கப்பல் இந்திய கடற்படையுடன் இணைப்பு




கல்வாரி வகை நீர்மூழ்கிக் கப்பல் திட்டம் 75 இன் கீழ் ஆறு நீர்மூழ்கிக் கப்பல்களை இணைக்க இந்திய கடற்படை திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே மூன்று கப்பல்கள் தயாரிக்கப்பட்டு இந்திய கடற்படையுடன் இணைத்து இயக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், நான்காவது ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பலான ஐ.என். எஸ். வேலா, மும்பையில் உள்ள கடற்படைத் தளத்தில் கடற்படைத் தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் முன்னிலையில் இந்தியக் கடற்படையில் இன்று இணைக்கப்பட்டது. பின், இந்த நீர் மூழ்கிக் கப்பலை கடற்படை தலைவர் அட்மிரல் கரம்பீர் சிங் இயக்கினார்.

மத்திய அரசுக்குச் சொந்தமான மசகான் டாக் என்கிற கப்பலைத் தயாரிப்புநிறுவனம் நீர்மூழ்கிக் கப்பலை கட்டமைத்துள்ளது. நீர்மூழ்கிக் கப்பல் இணைத்ததன் மூலம், இந்திய கடற்படைக்கு மேலும் வலிமை சேர்ந்துள்ளது.

இதுகுறித்து கடற்படைத் தலைவர் அட்மிரல் கரம்பீர் சிங் கூறியதாவது:

ஐ.என்.எஸ். வேலா நீர்மூழ்கிக் கப்பல் முழு அளவிலான செயல்பாடுகளை மேற்கொள்ளும்திறன்கொண்டது. இன்றைய சிக்கலான பாதுகாப்பு சூழ்நிலையில், இந்தியாவின் கடல்சார் நலன்களைப் பாதுகாப்பதிலும், கடற்படையின் திறனை மேம்படுத்துவதிலும் இது பங்கு வகிக்கும். பி 75ன் திட்டம் இந்தியா பிரான்ஸ் இடையேவளர்ந்து வரும் ஒற்றுமையை பிரதிபலிக்கிறது. இந்த நீடித்த கூட்டாண்மை புதிய உச்சத்தை அடைந்துள்ளதை குறிக்கிறது. திட்டம் 75 ன் பாதியை நாம் கடந்துவிட்டோம்.

கடற்படைப் பணியாளர்களின் தலைவராக இருந்த போது, கொரோனா காலம் சவாலாகவும், பதற்றமாகவும் இருந்தது. கப்பல்களில் தனி நபர் இடைவெளியை கடைப் பிடிப்பது சாத்தியமில்லை, ஆனால் நாங்கள் அனைத்தையும் சமாளித்தோம்.

சமீபத்தில் ஐ.என்.எஸ். விக்ராந்தின் கடல் சோதனையை வெற்றிகரமாக நடத்தினோம்.

ஒகஸ்ட் 2022க்குள் ஐ.என்.எஸ். விக்ராந்தை இயக்கமுடியும். சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். சீனாவிடம் இருந்து பாகிஸ்தான் சமீபத்தில் கொள்முதல் செய்திருப்பது இயக்கவியலை மாற்றக் கூடும், எனவே நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# மீன்பிடிக்கச் சென்று 2 மாதமாகியும் திரும்பி வீடு வராத மீனவர்களை

## மீட்டு தருமாறு உறவினர்கள் வேண்டுகோள்

வாழைச்சேனையில் இருந்து கடந்த செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆழ் கடலுக்கு படகில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் இரண்டு மாதமாகியும் வீடு திரும்பவில்லை என்றும், இவர்களை மீட்டுத் தருமாறும் கடலுக்கு சென்ற மீனவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


கடந்த செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற படகு இன்று வரைக்கும் கரைக்கு வரவில்லை என்றும், அவர்கள் தொடர்பான திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் கடலுக்குச் சென்ற மீனவர்களின் உறவினர்கள் நேற்று புதன்கிழமை ஓட்டமாவடி பாலைநகர் கிராமத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தனர்.

வாழைச்சேனை மீன்பிடி துறைமுறைகத்திற்கு கடந்த மாதம் வருகை தந்த கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடலுக்குச் சென்றவர்கள் அந்தமான் தீவில் கண்டு பிடிக்கப்பட்டனர் எனவும், அவர்களை மிக விரைவில் மீட்டுத் தருகிறேன் எனவும் உறவினர்களிடம் உறுதியளித்துச் சென்றும் இன்றுவரை குறித்த நபர்கள் வரவில்லை என்றும், எங்களுக்கு கடற்றொழில் அமைச்சர், கடல்தொழில் திணைக்களம், பிரதேச மீனவ சங்கங்கள் உரிய நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்தி தீர்வினை பெற்றுத் தருவதில் அசமந்தப்போக்காக உள்ளன என மீனவர்களின் உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த மீனவர்கள் அந்தமான்தீவில் உள்ளமை தொடர்பில் எங்களது தொலைபேசிக்கு படங்கள் அனுப்பப்பட்டதுடன், தொலைபேசி அழைப்பு வந்த நிலையில் எங்களோடு அந்தமான்தீவில் உங்களது குடும்ப உறவினர்கள் உள்ளனர் எனவும் அவர்களை கண்ட பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்த நிலையில் மீண்டும் அந்த அழைப்பை தொடர்பு கொள்ள முயற்சித்த போது அழைப்பை ஏற்படுத்த முடியவில்லை. எமது உறவினர்கள் அவர்களிடம் உள்ள நிலையில் அவர்களுக்கு எங்களது தொடர்பு இலக்கம் வழங்கப்பட்டு எங்க ளோடு தொடர்பு கொண்டார்கள்.

அந்தமான்தீவில் இருந்து 00913192245530 மற்றும் 0115299623 என்ற இலக்கத்தின் மூலம் தொலைபேசி அழைப்பு வந்த தங்களது உறவினர்கள் தொடர்பில் பெயர் குறிப்பிட்டு விசாரணை செய்தனர். இதன் பின்னர் தொடர்பு இல்லாமல் உள்ளமைக்கான காரணம் என்ன என்று இன்னும் தெரியவில்லை என மீனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தமான்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மீனவர்கள் தற்போது எங்கே? அந்தமான்தீவு கடல் பாதுகாப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது உறவினர்கள் அங்கிருந்து படகுடன் எங்கு கொண்டு செல்லப்பட்டனர். இது தொடர்பில் மீனவர்கள் உள்ளனர் என்றும், பிறகு மீனவர்களின் தகவல் கிடைக்கவில்லை என்றும் அரசாங்கம் எங்களை ஏமாற்றுகின்றதா? அல்லது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பில் கரிசனை கொள்ளாமல் உள்ளாரா? என்று பாதிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.




நான்கு மீனவர் சென்ற குறித்த படகு நீலநிறம் என்றும் அதன் இலக்கம் IMUL A 0093 Tle என்று தெரிவிக்கப்பட்டுள்ளமையுடன், இதில் வாழைச்சேனையைச் சேர்ந்த எம்.வி.ரிஸ்கான் (வயது 21), வாழைச்சேனையைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான எம்.எச்.முஹம்மட் கலீல் (வயது 49), வாழைச்சேனையைச் சேர்ந்த ஏ.எம்.றியாழ் (வயது 19), வாழைச் சேனையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கே.எம்.ஹைதர் (வயது 41) ஆகியோர் சென்ற நிலையில் இன்று வரை கரை திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று மாநகர சபையின் வரவு-செலவுத்திட்ட கலந்துரையாடல்






அக்கரைப்பற்று மாநகர சபையின் வரவு-செலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதா உல்லா அகமட் ஸகியின் தலைமையில் நேற்று புதன்கிழமை மாநகர கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி மற்றும் மாநகர சபை செயலாளர், கணக்காளர், வைத்தியர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். அக்கரைப்பற்று மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 2021 டிசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதற்கமைவாக, வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் இக்கலந்துரையாடலின் போது விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சீமெந்து வியாபாரிகளுடான கலந்துரையாடல்



சம்மாந்துறை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சீமெந்து தட்டுப்பாடு மற்றும் உத்தரவாத விலையை நிர்ணயம் செய்தல் தொடர்பாக சீமெந்து வியாபாரிகளுடான கலந்துரையாடல் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது சீமெந்து பக்கெட்டில் பொறிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்வது தொடர்பாகவும், சீமெந்து தட்டுப்பாடு நிலவுவதற்கு காரணத்தையும் சீமெந்து வியாபாரிகளிடம் கேட்டறிந்து கொண்டமையுடன் எதிர்காலத்தில் இப்பிரச்சினையினை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

சீமெந்து வியாபாரத்தில் பதுக்கல் மேற்கொள்ளாமல் பொதுமக்களுக்கும் பாதிப்பு அல்லாத வகையில் சீமெந்து வியாபாரிகள் மன சாட்சியுடன் சீமெந்து வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு தவிசாளர் சீமெந்து வியாபாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், வருமான வரிப் பரிசோதகர் ஏ.எம்.அமீன், பட்டதாரி பயிலுனர் எம்.ரீ.எம்.நப்ரீஸ், சீமெந்து வியாபாரிகள் உள்ளிட்டோர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# பல்வேறு கோரிக்கைகளை வலிறுத்தி சுகாதாரத் துறையினர் போராட்டம்

பல்வேறு கோரிக்கைகளை வலிறுத்தி வைத்தியசாலைகளில் சுகாதாரத்துறையினர் இன்று சுகவீன விடுமுறை போராட்டத்தினை முன்னெடுத்துள்ளமையுடன் இன்று (வியாழக்கிழமை) வைத்தியசாலைகளில் கவனவீர்ப்பு போராட்டங்களையும் முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சுகாதாரத்துறையின் தொழிற்சங்க உறுப்பினர்கள் வைத்தியசாலையில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். சுகாதார தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சேவை தரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும், சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படல்வேண்டும், கடந்த அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட பதவி உயர்வு தீர்மானங்கள் இதுவரையில் நிறைவேற்றப்படாமை, சிறிய தொகையாக வழங்கப்பட்டுள்ள சிறியளவில் வழங்கப்படும் கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும், தரநிலை தொடர்பிலான சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளபோதிலும் இதுவரையில் அதனை நடைமுறைப்படுத்தப்படாமை, சுகாதாரத் துறையில் உள்ளவர்கள் பட்டங்களைப்பெறும்போது அவர்களுக்கான பதவியுயர்வுகள் வழங்கப்படவேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதாரத் துறையின் தாதியர்கள், மருந்தக உதவியாளர்கள், மருந்தாளர்கள் இணைந்து சுகவீன விடுமுறைப்போராட்டத்தை முன்னெடுத்துவரும் அதேநேரம் இன்று கவனவீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்த போராட்டம் காரணமாக வைத்தியசேவைகள் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.




# முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கையணிக்கு அபார வெற்றி!

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கையணி 187 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கையணி தனது முதல் இன்னிங்ஸில் 386 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, மத்திய தரவரிசை வீரர்களின் அடுத்தடுத்த ஆட்டமிழப்புகளால் தடுமாறினாலும் பின்வரிசைத்துடுப்பாட்ட வீரர்களின் உதவியோடு 230 ஓட்டங்களைச் சேர்த்தது. இலங்கையணியின் பிரவீன் ஜயவிக்ரம 4 விக்கெட்டுக்களையும் ரமேஸ் மெண்டிஸ் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய இலங்கை யணி, 191 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து மொத்தமாக 347 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்த போது தனது இன்னிங்ஸை முடித்துக் கொண்டு மேற்கிந்தியத் தீவுகளைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. முதல் இன்னிங்ஸில் சதமடித்த இலங்கை யணித்தலைவர் திமுத் கருணாரத்ன இரண்டாவது இன்னிங்ஸில் 83 ஓட்டங்களை எடுத்தார். அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களைப் பெற்றார். தனது இரண்டாது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி மிக வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து நான்காவது நாள் ஆட்டம் சீரற்ற காலநிலையால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டபோது 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 52 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

போட்டியின் ஐந்தாவதும் இறுதியுமான இன்றைய நாளில் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் அணி, 160 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது. போனர் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும், ஜோஸ்வா த சில்வா 54 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இலங்கையணியின் லசித் எம்புல்தெனிய 5 விக்கெட்டுக்களையும், ரமேஸ் மெண்டிஸ் 4 விக்கெட்டுக்களையும், பிரவீன் ஜயவிக்ரம 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கையணித் தலைவர் திமுத் கருணாரத்ன தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வரும் 29 ஆம் திகதி இதே காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## பங்களாதேஷ் அணி வீரர் மஹமதுல்லா டெஸ்ட் போட்டிகளிலிருந்த ஓய்வுபெற்றார்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் ரி-20 அணித்தலைவரான மஹமதுல்லா, டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுகிறேன் என அறிவித்துள்ளார்.

கடந்த ஜூலையில் சிம்பாப்வேயுடன் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி விளையாடிய டெஸ்ட் போட்டியில் அவ்வணி 220 ஓட்டங்களால் வரலாற்று வெற்றியொன்றினைப் பெறுவதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் மஹமதுல்லா. அந்த டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 150 ஓட்டங்களைப் பெற்ற அவர், போட்டியின் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு தொடர்ந்தும் டெஸ்ட் போட்டிகளிலும் பங்களிப்புச் செய்வார் என எதிர்பார்க்கப் பட்ட நிலையிலையே, மஹமதுல்லா தனது திடீர் ஓய்வினை அறிவித்திருக்கின்றார். அவரது இந்த முடிவு பங்களாதேஷ் அணியின் இரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியிருக்கிறது.

இதுதான் தனது டெஸ்ட் வாழ்க்கையினை நிறைவு செய்வதற்கு சிறந்த தருணம் எனக் கருதுகிறேன் எனக் குறிப்பிட்டிருக்கும் அவர், இந்தச் சந்தர்ப்பத்தில் தான் டெஸ்ட் அணிக்கு திரும்பிய போது தனக்கு ஆதரவு வழங்கிய பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவருக்கு நன்றிகளையும் தெரிவித்திருக்கிறார். தனது ஆற்றல் மீது நம்பிக்கை வைத்த அணி வீரர்களுக்கும், தனது அணி உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்திருக்கும் மஹமதுல்லா, பங்களாதேஷ் அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது பெருமையாக இருக்கின்றமையுடன், அந்த ஞாபகங்களைத் தொடர்ந்து பேணுவேன் எனவும் தனது சமூகவலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார். டெஸ்ட் போட்டிகளில் இருந்து மஹ மதுல்லா ஓய்வு பெற்ற போதும், பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்காக தொடர்ந்து ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படு கின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டில் பங்களாதேஷ் அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமாகியிருந்த 36 வயதாகும் மஹமதுல்லா, 33.49 என்கிற சராசரியுடன் 2,914 ஓட்டங்களை எடுத்துள்ளதோடு, 43 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது



நெதர்லாந்து அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் இடம்பெற்றிருந்த தென்னாபிரிக்க அணியின் முன்னணி வேகப் பந்துவீச்சாளர் லுங்கி இங்கிடிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள நெதர்லாந்து அணி 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. தொடரின் முதலாவது போட்டி நாளை செஞ்சூரியனில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தத்தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணியில் இடம்பிடித்திருந்த வேகப் பந்துவீச்சாளர் லுங்கி இங்கிடிக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதையடுத்து அவரை தனிமைப்படுத்தி சிகிச்சையளிக்க அந்தநாட்டுக் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இறுதியாக கடந்த ஜூலை மாதம் அயர்லாந்துடனான ரி-20 தொடரில் விளையாடிய லுங்கி இங்கிடி, அதன் பின்னர் தென்னாபிரிக்க அணியில் இடம்பெறவில்லை. இலங்கைக்கான தென்னாபிரிக்க அணியின் சுற்றுப்பயணத்தை சொந்தக் காரணங்களுக்காக அவர் தவிர்த்திருந்தார். ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் அவர் இடம்பெற்றிருந்தாலும் எந்தவொரு போட்டியிலும் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

தற்போது கொரோனாவால் பாதிக்கப்பட்ட லுங்கி இங்கிடிக்குப் பதிலாக ஜூனியர் டாலா தென்னாபிரிக்க அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

# வெளிமாவட்ட டெங்கு தொற்றாளர் ஒருவர் யாழ். வந்தால் பரவும் அபாயம் உள்ளதாம்!

## மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்

டெங்கு வைரஸ் தொற்றுள்ள ஒருவர் வெளி மாகாணங்களில் இருந்து இங்கு வருகை தந்தால் டெங்கு நோய் எந்த நேரத்திலும் யாழ்ப்பாணத்தில் தீவிரமாக பரவும் வாய்ப்புள்ளதென வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் கொரோனாத் தொற்று மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டத்துக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்தில் நாங்கள் செய்த நுளம்புகள் சம்பந்தமான பூச்சியியல் ஆய்விலே டெங்கு நோயைப் பரப்புகின்ற நுளம்புகளும் குடம்பிகளும் அதிகமாக காணப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது. டெங்கு வைரஸ் தொற்றுள்ள ஒருவர் வெளிமாகாணங்களில் இருந்து இங்கு வருகை தந்தால் டெங்கு நோய் எந்த நேரத்திலும் யாழ்ப்பாணத்தில் தீவிரமாக பரவும் வாய்ப்புள்ளது.

டிசெம்பர் 6 முதல் ஒரு வார காலப் பகுதியை யாழ் மாவட்டத்தில் டெங்கு நுளம்பு கட்டுப்பாடு வாரமாக பிரகடனப் படுத்தப்படுவதுடன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை சிரமதானம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மட்ட கிராமிய மட்ட டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டங்களை நடத்தி, டெங்கு நுளம்பு கட்டுப்பாடு காலப்பகுதியில் பாடசாலைகள், பொதுஇடங்கள், அலுவலகங்கள், வீடுகளில் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. – என்றார்.





யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக பொறுப்பாளருமாகிய வே.குகேந்திரனின் (ஜெகன்) தந்தையான திரு. கார்திகேசு வேலும்மயிலும் (ஓய்வு பெற்ற அதிபர்) இன்று காலமானார்.

# முல்லைத்தீவில் இருந்து வவுனியா சென்ற பெண்ணைக் காணோம்; பொலிஸில் முறைப்பாடு



கடந்த 05-11-2021 அன்று முல்லைத்தீவு நாயாறு பகுதியில் இருந்து வவுனியாவுக்கு புடைவைகள் மற்றும் பொருள்கள் வாங்குவதற்காக சென்ற நாயாறு பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான சிவகுமார் ஜெயந்தி எனும் 42 வயதுடைய பெண் இன்றுவரை வீடு திரும்பாத நிலையில் அவரது மூன்று பிள்ளைகளும் தாயை காணாது தவித்து வருகின்றனர்.

குறித்த பெண் காணாமல் போன இரண்டு தினங்களில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கணவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது இருப்பினும் இன்று வரை மனைவி தொடர்பான எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸாரும் தனது மனைவியை தேடிதர அக்கறை காட்டவில்லை என்றும் தாயை காணாத நிலையில் பிள்ளைகள் தவித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கும் கணவன், தன்னுடைய மனைவி தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் உடனடியாகத் தனது 0765350421 எனும் குறித்த தொலைபேசி இலக்கத்துக்குத் தகவல் தருமாறும் கோரியுள்ளார்.

இதேவேளை பொலிஸார் தனது மனைவியைத் தேடித்தர விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோருகின்றார். தாய் காணாமல் போன நிலையில் 15 வயதுடைய ஆண் மகன் மற்றும் 12 வயதுடைய மகள் மற்றும் 7 வயதுடைய மகள் ஆகியோர் தாயைக் காணவில்லை என மிகுந்த சோகத்தில் வாடுகின்றனர்.

# தெதிகம கொடவெஹெர ராஜமஹா விகாரையை புனித பூமியாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை



கேகாலை தெதிகம கொடவெஹெர ராஜமஹா விகாரையை புனித பூமியாக அபிவிருத்திசெய்யும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (புதன்கிழமை) சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நாடாளுமன்ற வளாகத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற தெதிகம கொடவெ ஹெரராஜமஹா விகாரையை புனித பூமியாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொடவெஹெர ராஜமஹா விகாரை பூமியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பிலான முப்பரிமாணத் திட்டத்தைத் தயார் செய்து அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

வாகல்கடவினை உள்ளடக்கியதாக நிர்மாணிக்கப்படும் கொடவெஹெர ரஜமஹா விகாரையின் புதிய நுழைவாயில் தொடர்பிலும், பல்நோக்கு கட்டடம், சதர மகா தேவாலயம் நிர்மாணிப்பு ஆகியன தொடர்பிலும் பிரதமர் இதன் போது விசேட கவனம் செலுத்தினார்.

தெதிகம ராஜமஹா விகாரையின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய ஒத்னாபிடியே விமல தேரர் மற்றும் விகாராதிகாரி வணக்கத்திற்குரிய அளுத் நுவர சுமன தேரர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

மேலும் குறித்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய காந்த குணதிலக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, பிரதமரின் சிரேஷ்ட உதவி செயலாளர் பிரியங்க நாணயக்கார, தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுரமனதுங்க, புனித பூமி பணிப்பாளர் விதான, வரகாபொல பிரதேச சபை தவிசாளர் சரத் சுமன சூரிய, உப தலைவர் நிமல் ரணதுங்க, பிரதேச செயலாளர் ரங்கன சஜீவ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய எரிபொருள் வாயு நிறுவனம் ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு நிறுவனமாக தேசிய எரிபொருள் வாயு நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த நிறுவனத்துக்கு 2021 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5 ஆம் பகுதியின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான பொறுப்புகள் ஒப்படைக்கப்படவுள்ளன.

அதற்கமைய, 2007 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தேசிய பெற்றோலிய மற்றும் வாயுக்கள் நிறுவனத்தை நிறுவுவதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.





பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 96 ஆவது ஜனன தினம் கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி மத்திய நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பகவானுக்குத் தீபாராதனை நடைபெறுவதையும், சிரேஷ்ட அறங் காவலர் கே.பி.பாலநாயகம் சர்வமதக் கொடியேற்றுவதையும் நிகழ்வில் பங்கேற்ற பிரதமரின் இந்துமத ஆலோசகர் சட்டத்துறை கலாநிதி கே.எம்.சுவாமிநாதன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2021இல் வெளியிடப்பெற்றது.